மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வாடிப்பட்டி, மதுரை மாவட்டம்.

முன்னிலை: திரு.D.ராம்கணேஷ் M.A., M.L.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி.

2021ம் வருடம் ஏப்ரல் மாதம் 17 ம் நாள்

ஸ்ரீபிலவ ஆண்டு சித்திரை மாதம் 04 ம் நாள் சனிக் கிழமை

**I.A . No. 236/2021**
**in I.A. 897/2019**
**in**
**OS.No.. 73/2019**

புஷ்பம் ..... மனுதாரர்/மனுதாரர்/வாதி

//எதிர்//

1. அமிர்தவள்ளி
2. ஜே. ராஜேந்திரன்

.... எதிர்மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு 18.02.2021ம் தேதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்/மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.N. ராஜாஜி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.G.M. ரமணி அவர்கள் ஆஜராகியும், கடந்த 08.04.2021ம் தேதி இந்நீதிமன்றத்தில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, இருதரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடலான...

**உத்தரவு**

இந்த நிர் மனுவும் இடைக்கால மனு எண். I.A.No.897/19 மனுவில் இம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து விபரத்தினை 2வது லக்க சொத்திற்கு அடுத்து 3வது லக்க சொத்தாக சேர்த்து திருத்தம் செய்ய அனுமதி கோரி, உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17 மற்றும் சட்டப்பிரிவு 151ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுவின் சுருக்கம்:**

மனுதாரர் அசல் வழக்கின் வாதி என்றும், இடைக்கால மனு எண் I.A.No. 897/19 மனுவில் மனுதாரர் என்றும், அசல் வழக்கானது பிரதிவாதிகளைக் கட்டுப்படுத்தி நிரந்தர தடையாணை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி அசல் வழக்கில் தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இடைக்கால மனு தாக்கல் செய்து அதுவும் இடைக்கால மனு எண். 429/2019ன்படி தாவா சொத்தானது அசல் வழக்கு விசாரணை முடியும் வரை இருந்த நிலையிலேயே இருந்து வரவேண்டுமென Status Quo கடந்த 12.9.2019ம் தேதியில் இந்நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், ஆனால் மேற்படி உத்தரவு விதிமுறைகளை எதிர்மனுதாரர் பின்பற்றாமல் தாவா சொத்தில் தொடர்ந்து கட்டுமான பணிகளை செய்து வந்ததால், மேற்படி எதிர்மனுதாரரை நீதிமன்ற அவமதிப்புக்குள்ளாக்க கோரி இடைக்கால மனு I.A.No. 897/19 மனு

தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி இடைக்கால மனு I.ANo.429/2019ல் குறிப்பிடப்பட்டுள்ள 2வது லக்க சொத்திற்கு அடுத்து வடக்கு பக்கம் எதிர்மனுதாரர் கட்டிடம் கட்டி வரும் அவருக்கு பாத்தியமான சொத்தானது இம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தில் உள்ளடங்கிய சொத்து ஆகும். மேற்படி சொத்து விபரத்தினையும் மேற்படி நீதிமன்ற அவமதிப்பு மனுவான இடைக்கால மனுவான I.A.No. 897/19 மனுவில் 2வது லக்க சொத்திற்கு அடுத்து 3வது லக்க சொத்தாக சேர்த்து திருத்தம் செய்யக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டதாகவும், மேற்படி திருத்தமும் நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கைக்கு அவசியமானது என்றும், எனவே மனு அனுமதிக்கப்படவேண்டுமென்றும் வாதுரைக்கப்பட்டது._

**<u>2) எதிர்மனுதாரர் தரப்பு எதிர் உரையின் சுருக்கம்:</u>**

மனுவில் கண்டுள்ள விபரங்கள் தவறானதாகும், அசல் வழக்கு பிராதிலோ அல்லது இடைக்கால மனு எண். I.A.No. 429/19 மனுவிலோ இம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து விபரம் எதுவும் குறிப்பிடப்படவில்லையென்றும், எனவே இம்மனு பரிகாரம் சட்டப்படி கிடைக்கத்தக்கதல்ல என்றும், உண்மையில் வாதியின் வடக்கு புற சுவற்றிலிருந்து தென்வடலாக 2 அடியும், கிழமேலாக 45 அடியும் மொத்தம் 84 சதுரடி மட்டுமே பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்வதாக வழக்கிலும் இடைக்கால மனு எண்.I.A.No.429/19 மனுவிலும் குறிப்பிட்டுள்ளனர் என்றும், ஆனால், எதிர்மனுதாரர்கள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட பழைய சுவற்றின் மேல்பகுதியில்தான் மேற்படி இடைக்கால உத்தரவு (Status quo) பிறப்பிக்கப்படுவதற்கு முன்பாகவே கட்டிடம் கட்டியிருந்தனர் என்றும், எனவே இந்த நிர் மனுவோ அல்லது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை கோரி மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்ட மனுவோ சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றும் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்த நிர் மனு விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து விபரமானது இடைக்கால மனு எண். I.A.No. 429/19 மனுவிலோ அல்லது நீதிமன்ற அவமதிப்பு கோரும் இடைக்கால மனு I.A.No. 897/19 மனுவிலோ குறிப்பிடப்படவில்லையென்றும், மேற்படி இம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து விபரத்தில் கட்டுப்பட்டுள்ள சொத்து விபரத்தினை பொறுத்து எவ்வித தற்காலிக உறுத்துக்கட்டளை (Status quo) உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லையென்றும், இடைக்கால மனு எண்.I.A.No. 897/19 மனுவானது இருதரப்பு விசாரணைக்கு பின்னீடு உத்தரவு பிறப்பிக்கக்கூடிய நிலையில், இம்மனு மற்றும் அசல் வழக்கு நடவடிக்கையினை காலதாமதப்படுத்தும் உட்கருத்துடன் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், மனு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றும் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

3) மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு அனுமதிக்கத்தக்கதா என்பதை தீர்வு காண வேண்டியது பொருண்மை ஆகும்.

**<u>தீர்வு:-</u>**

4) இருதரப்பு வாதுரை மற்றும் வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்ததில் இந்த நிர் மனுவும், நீதிமன்ற அவமதிப்பு கோரி மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால மனு எண். I.A.No. 897/19 மனுவில் உள்ளீட்டு மனுவாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி இடைக்கால மனு எண். I.A.No. 897/19 மனுவும், எதிர்மனுதாரர் இடைக்கால மனு எண் I.A.No. 429/19 மனுவில் பிறப்பிக்கப்பட்ட தற்காலிக உறுத்துக்கட்டளை உத்தரவினை(Status Quo) மீறி தாவா சொத்தில் கட்டுமான பணிகளை செய்து வந்ததால், நீதிமன்ற அவமதிப்புக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும். நீதிமன்ற அவமதிப்பு தொடர்பாக உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 2(A)ல் அடியிற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

[2-A Consequence of disobedience or breach of injunction. - (1) In the case of disobedience of any injunction granted or other order made under rule 1 or rule 2 or breach of any of the terms on which the injunction was granted or the order made, the Court granting the injunction or making the order, or any Court to which the suit or proceeding is transferred, any order the property of the person guilty of such disobedience or breach to be attached, and may also order such person to be detained in the civil prison for a term not exceeding three month, unless in the mean time the Court directed his release.

2.) No attachment made under this rule shall remain in force for more than one year, at the end of which time, if the disobedience or breach continues, the property attached may be sold and out of the proceeds, the Court may award such compensation as it thinks fit to the injured party and shall pay the balance, if any, to the party entitled thereto.]

மேலும் இது தொடர்பாக மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில் அடியிற்கண்ட வழக்கில் முன்தீர்ப்பு வழங்கப்பட்டு சட்ட இதழ்களில் பதிவுகளும் ஏற்பட்டுள்ளது.

**Samee Khan v. Bindu Khan, AIR 1998 SC 2765 1908 (3) Civil CC 707: 1998 (7) SCC 59: 1998(3) Cur CC 207.**

**Order 39 Rule 2-A – Injunction – Disobedience- Words** "**and may also**" – Court empowered to detain person in civil prison or attach his property – Both steps can be resorted to or one of them alone need be chosen depending on fact situation. The words "any may also" in Order 39, Rule 2-A cannot be interpreted in the context as denoting to a step which is permissible only as additional to attachment of property of the opposite party. If those words are interpreted like that it may lead to an anomalous situation. If the person who defies the injunction order has no property at all, the Court becomes totally powerless to deal with such a disobedient party. He would be immured from all consequences even for any open defiance of a Court

order. No interpretation shall be allowed to bring about such a sterile or anomalous situation. It is open to the Court to attach the property of the disobeying party and at the same time the Court can order him to be detained in civil prison also if the court deems it necessary. Similarly the Court which orders the person to be detained in civil prison can also attach the property of that person. Both steps can be resorted to or one of them alone need be chosen. It is left to the Court to decide on consideration of the fact situation in each case.

எனவே நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை தொடர்பான நடவடிக்கைக்கு மேற்படி மனுவில் தேவையான விபரங்கள் குறிப்பிடப்பட வேண்டியது அவசியமானதாகும். ஆனால் மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால மனு எண். 897/19 மனுவில் மேற்படி நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்கப்படுவதற்கான எதிர்மனுதாரர்கள் பெயர் முகவரி மற்றும் பற்றுகை செய்யப்படுவதற்கான சொத்து விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படாததால், மேற்படி மனுவானது உத்தரவுக்கு ஒத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில், மீண்டும் இருதரப்பு விசாரணைக்காக மறுதிறவு செய்து கேட்கப்பட்டுள்ள நிலையில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு பாத்தியமான இம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து விபரத்தினை மேற்படி நீதிமன்ற அவமதிப்பு மனு எண். I.A.No. 897/19 மனுவில் 3வது லக்க சொத்தாக சேர்த்து திருத்தம் செய்ய அனுமதி கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. மேற்படி இம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தானது, நீதிமன்ற அவமதிப்புக்கு உட்படுத்தக்கூடியதா அல்லது இல்லையா என்பதையும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் நீதிமன்ற அவமதிப்பு செயல்பாட்டினை புரிந்துள்ளாரா என்பதையும், இம்மனு விசாரணையில் தீர்வு காண இயலாது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனினும், மேற்படி உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 2Aன்படி நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கைக்கு தேவையான விபரங்கள் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் என்ற நிலையில், இம்மனு பரிகாரம் தொடர்பான திருத்தம் செய்வது இயற்கை நியதிக்கும், சட்டத்திற்குட்பட்டதாகவே இநீதிமன்றம் கருதுகிறது.

எனவே மேற்கண்ட இருதரப்பு வாதுரை மற்றும் வழக்கு பொருண்மைகள் மற்றும் சட்டநிலைப்பாடுகளின்படி இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் 2021ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

(ஓம்.D.ராம்கணேஷ்)

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

//உண்மை நகல்//